முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : **1423**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.08.2023,** செவ்வாய்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பாமரர்க்கும் அருளும் தேவகுருவே
சரவணச்சுடரேற்றி இந்த கலியுகத்தில்
சகலருக்கும் அருளுகின்ற சற்குருவே
2. சற்குருநாதனே ஆறுமுக அரங்கனே
சாற்றிடுவேன் சுப்ரமணியர் யானும்
உந்தனுக்கு அற்புதம்பட ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 05 ம் நாள், 22.08.2023 செவ்வாய்கிழமை)
அகிலத்தில் உன் ஞானமே உலகோர்க்கு வரமாகக்கிட்டி
3. கிட்டியே பிறவாத பெரும்பேற்றை
குறைவின்றி இந்த கலியுகத்தில் தந்தருளும்
அருளாக அறமாகஅமுதாக அரங்கன் நீ அருளுகின்ற அற்புதமான சேவையை
வரமாக ஏற்று உலகோர் வணங்கி உன்வழி   வந்து நின்றால் போதுமப்பா
4. அப்பனே அவர்கட்கு இலகுவாய் சுப்ரமணியர் யானும்
ஆற்றல்பட சித்தியாகி இந்த கலியுகத்தில்
அவரவர் வந்துதித்த நோக்கம் விளங்கி
அழியாமை எனும் பேரின்பகதி இலகுவாய் கிட்ட நேரும்
5. நேர்மையான வாழ்வும்  நீதிநெறி பிறழாத
நெஞ்சம் நெகிழ்ந்து தயவுள் கலந்து இனிதே
வறுமையிலும் பிசகாத பெருவாழ்வாய்
வல்லமைபட வாய்மையே வெல்லுமென
6. அரங்கன் தர்மவழி அகலாது தொடர்ந்து
அரங்கனே ஆறுமுகன் என
ஆற்றல்பட உண்மை தெளிவு கண்டு
அகிலத்தார் இந்த கலியில் அரங்கன் உன் வழியே

7. உன்வழியே பிறவா பெரும்பேற்றை
உயிர்கொலை நீக்கி வாழ்ந்து இனிதே
நன்மைபட ஞானவான்களென அங்கீகாரம் பெற்று
ஞானிகளாக வரங்களும் கூடி இந்த கலியுகத்தில் நற்பேருபட வாழ்ந்து சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–